RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# நாயன்மார்களின் சைவமரபும் மெய்யியல் தத்துவங்களும்

அ. அகிலாண்டேசுவரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் & தமிழ்க்கல்லூரி, பேரூர் - 641010 இந்தியா

# The Saiva Tradition and Philosophical Thought of the Nayanmars

A. Akilandeswari [a, *]

[a] Department of Tamil, Thavathiru Santhalinga Adigalar Arts, Science & Tamil College, Perur - 641010, India

* Corresponding Author: akila.prasanna2011@gmail.com

## ABSTRACT

The Tirumurai, a twelve-part corpus of Tamil Saiva devotional literature, occupies a distinguished position in Tamil literary and religious history. The final work in this collection is Periyapuranam, composed by Sekkizhar and also known as Tiruttondar Makkathai. Celebrated for its accounts of the lives and devotion of the devotees of Shiva, Periyapuranam is widely regarded as a major Tamil devotional epic. Although Nampi Arurar (Sundarar) occupies a prominent place in its narrative framework, the work presents the spiritual experiences and exemplary lives of Shiva's devotees as its central subject. It recounts the lives of sixty-three individual Nayanmars and nine groups of devotees, offering a broad representation of Saiva devotional traditions. This study examines the Saiva traditions and philosophical principles represented through six Nayanmars: Tirujnanasambandar, Kannappar, Chandeshwarar, Kochengat Chola, Tirumular, and Karaikkal Ammaiyar. It investigates their devotional practices, expressions of surrender, and approaches to the relationship between the individual soul and Shiva. Particular attention is given to the understanding of Shiva as the eternal and supreme reality, the development of Shiva worship, and the philosophical significance of devotion within the Saiva tradition. The study also explores how the lives of these Nayanmars communicate the ideal of loving service to God and how devotional commitment is associated with spiritual liberation. The study argues that the lives portrayed in Periyapuranam illuminate the close relationship between devotion, ethical conduct, religious tradition, and philosophical thought in Tamil Saivism. The belief that sincere devotion to Shiva can release the soul from the consequences of its accumulated deeds represents an important dimension of this devotional philosophy. By analysing the traditions of the six selected Nayanmars, this study highlights the contribution of Periyapuranam to the development of Tamil Saiva thought and its enduring emphasis on divine love, selfless service, and spiritual transformation.

**Keywords:** Tamil Saivism, Saiva tradition, Nayanmars, Karaikkal Ammaiyar.

## முன்னுரை

மக்கள் அனைவரும் தத்தம் வாழ்க்கையில் மேற்கொள்ளும் ஒழுகலாறுகளுள் முக்கியமானது தெய்வ வழிபாடு ஆகும். உலக சமயங்கள் பலவற்றுள் மனிதர்களை நன்னெறிப்படுத்தி, மேலான நல்வாழ்வினை அடைவதற்கு உதவும் சமயங்களுள் சைவ சமயம் தலையாயதாகும். சோதி பிழம்பாக நின்று எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடப்படும் சைவ சமயம், பழம்பெருஞ் சமயமாக கருதப்படுகின்றது. இச்சமயத்தின் தோத்திரப் பாடல்களாக பன்னிரு திருமுறைகளும் தத்துவக் கோட்பாடுகளாக பதினான்கு சைவ சித்தாந்த சாத்திரங்களும் விளங்கி வருகின்றது. சித்தாந்தத்தின் வழியே உயிர்கள் எவ்வாறு பாசத்தளைகளால் பிணைக்கப்பட்டிருக்கின்றது என்பதை அறிய முடிகின்றது. ஆன்மாக்களைப் பந்தித்திருப்பது

பாசத்தளைகள். அப்பாசத் தலைகளிலிருந்து விடுபடுவதற்கு இறைவனின் பெருங்கருணை குணம் உதவுகின்றது. இறைவன் சிற்றறிவுடைய உயிர்களுக்கு அருள் செய்யும் பொருட்டு பதிஞானத்தால் பாசத்தளைகளின் பந்தத்தினை அறுபட செய்கின்றான். இப்பெருங்கருணை குணம் முதலாக இறைவனின் பொதுவியல்பு மற்றும் சிறப்பியல்புகளை ஆராய்ந்து அறிவதை நோக்கமாகக் கொண்டு அமைந்துள்ளது கட்டுரை.

## இருபா இருபஃது

பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானின் முழுமுதற் தன்மையினையும் உண்மை இலக்கணங்களையும் சித்தாந்த சாத்திரங்கள் விளக்குகின்றது. இத்தத்துவக் கோட்பாட்டு நூல்களை உயிரின் இயல்பினையும் பாசத்தளைகளின் இயல்பினையும் விவரிக்கின்றது. பதினான்கு சித்தாந்த சாத்திரங்களுள் மெய்கண்ட தேவ நாயனாரின் மாணவரான திருத்துறையூர் அருணந்தி சிவாச்சாரியார் அருளிய இருபா இருபஃது நூல் பத்துத் திருவெண்பாக்களையும் பத்துத் திருவாசிரியங்களையும் முறையே கொண்டதாகும். பாசநீக்கமே இறைவனை அடையும் வழி என்பதால் பாச இலக்கணத்தைப் பகுத்து வினாவிடை பகுதியாக தெளிவுற எடுத்துக்காட்டுகின்றது. இந்நிலையே முத்தி பேறு. உயிர்கள் சிற்றறிவுடையது, சொற்பொருட் பகுதிகளான பாசஞானத்தினை அடையும் உயிர்கள் ஆராய்ந்து அறிந்த பின் பதிஞானத்தால் பதியினை அடைகின்றது. இந்த ஞானத்தை அளிக்கும் இறைவனின் இயல்பினை முதலாகக் கொண்டு இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.

## இறைவனின் இயல்புகள்

உயிர்கள் கருவிகளைக் கொண்டு பொருள்களை அறிவதால் அழுந்தி அறிகின்றது. பக்குவமற்று அஞ்ஞானச் பொருள்களினால் கட்டுண்டு கிடக்கும் உயிர்களைப் பதி ஞானத்தால் இறைவன் ஆட்கொள்கின்றான். இது அவனின் பெருங்கருணை குணத்தினைக் காட்டுகின்றது. அவன் கருவி கரணங்கள் என அனைத்தையும் கடந்து நிற்பவன் என்பதால் அவன் அழுந்தாமலே அறிவான். இயல்பு என்பதற்கு தன்மை என்று பொருள் கொள்ளப்படுகின்றது. பொருள்களை ஆராயன்று அறியும் தன்மையினை பொது இயல்பு (தடத்த இலக்கணம்) என்றும் அனுபவத்தின்கண் அறியும் தன்மையினை சிறப்பு இயல்பு (சொரூப இலக்கணம்) என்றும் பகுப்பர். பேரறிவு பொருளான இறைவனின் சொரூப இலக்கணத்தை,

"சுத்தன் அமலன் சோதி நாயகன்

முத்தன் பரம்பரன் எனும்பெயர் முடியா

வேறுநின் றுணர்த்தின் வியாபகம் இன்றாய்ப்

பேறும் இன்றாகும் எமக்கு எம்பெரும." (இருபா.பா.2:10-14)

என்னும் பாடல் வரிகளின் மூலம் உணரமுடிகின்றது. இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள தன்வயத்தனனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுணர்தல், இயல்பாகவே பாசங்களில் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றலுடைமை, வரம்பில் இன்பம் உடைமை ஆகிய எண்வகையும் இறைவனின் சிறப்பு இயல்புகளை விரித்துக் கூறுகின்றது. இதனை,

"மெய்த்தாறு சுவையுமே ழிசையுமெண் குணங்களும் விரும்புநால்வே" (திருஞான.தே.1.பா.131.1)

என்றும்,

"எட்டுக்கொல லாமவ ரீறில் பெருங்குணம்" (திருநாவு.தே.4.பா.18.8)

என்றும் தேவார் ஆசிரியர்கள் உணர்த்துவதன் மூலம் காணமுடிகின்றது. இறைவன் இயல்பாகவே பாசங்களற்றவன் என்பதால் தூய வடிவினன் ஆவான். இச்சுத்த இயல்பினை,

"அணவரியான் கண்டாய் அமலன் கண்டாய்" (திருநாவு.தே.6.பா.73.7)

என்றும்,

"அண்ட முதல்வன் அமலன் இடமாம்" (சுந்.தே.7.பா.94.2)

என்றும் வரும் திருமுறை வரிகளில் மும்மலமில்லா திருமேனி உடையவனை 'அமலன்' என்று குறிப்பிட்டுப் பாடியுள்ளதைக் காணமுடிகின்றது. இதை போலவே மற்ற இயல்புகள் குறித்தும் திருமுறை பதிகங்கள் நமக்குச் சான்றுப் பகர்கின்றன.

## அத்துவிதத் தொடர்பு

இறைவன் ஒருவனே அவனை வணங்கும் உயிர்கள் பல இவ்விரண்டும் தன்மையால் வேறு வேறு பொருட்களாக உள்ளன. இறைவன் தனக்கென அமைந்த சிறப்பு இயல்புகள் அல்லாமல் உயிர்களோடு நிற்கும் முறைமையே பொதுவியல்பு என்று கருதப்படுகின்றது. இதனை,

"அவையே தானேயாய்" (சிவஞான.சூத்.2:1)

என்று வரும் சிவஞானபோத சூத்திரத்தின் அதிகரணம் விளக்குகின்றது. அத்துவிதம் என்னும் சொல்லுக்கு முதன்முதலில் மெய்கண்டார் முதன் முதலில் பொருள் தருகின்றார். அத்துவித சம்பந்தம் என்பதற்கு அ.கி.மூர்த்தி அவர்கள், "அத்துவித சம்பந்தம் - இருமையில் ஒருமைத் தொடர்பு அதாவது, உலகத்திற்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பு: கலப்பினால் ஒன்றாயும், பொருள் தன்மையால் வேறாயும் உயிர்க்கு உயிராகும் தன்மையால் உடனாயும் இருப்பது. இவை இறைவனின் மூன்று இயல்புகள். இதுவே மெய்கண்டார் கண்ட மெய்ப்பொருள். மெய்கண்டார் கூறும் இந்த அத்துவிதமே சைவ சித்தாந்த மாகும். இதனை உமாபதி சிவம் பின்வருமாறு குறிக் கின்றார்: "உடலில் உயிர் போலக் கலப்பினால் ஒன்றாயும், கண்ணில் அருக்கன் போலப் பொருள் தன்மையில் வேறாயும் ஆன்ம போதமும் கண்ணொளியும் போல, உயிர்க்கு உயிராதல் தன்மையால் உடனாயும் இவ்வாறு இருபொருள் பிரிப்பின்றி உடனாய் நிற்றலாகிய அத்துவிதத்தை (சைவ சித்தாந்தம்) உடையது." (சைவ சித்தாந்த அகராதி, ப.11) என்பதன் வழியாக சிவஞான போதத்தில் மேற்கோளிட்டு குறிப்பிட்டுள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

சத்து பொருளான இறைவன் அநாதியாகவே உயிர்களிடத்து விட்டு நீங்காமல் ஆன்ம அறிவுனுள் பொருந்தாமல் பொருந்தி நின்று அறிவிக்கும் தன்மையினை உடையது என்றாலும் ஆன்மாக்கள் அதனை உணர்வதில்லை. இதனை,

"...எனது உளம்

நீங்கா நிலைமை ஊங்கும் உளையால்" (இருபா.பா.2:5-6)

என்று வரும் வெண்பா வரியின் மூலம் அறியமுடிகின்றது. மேலும், உயிரினாலே காரியம் ஞானேந்திரியங்கள் ஆன்மாவினால் அறிந்து காரியப்படும் என்பதை அறிவதில்லை என்றும் சுட்டிக்காட்டுகின்றது. இது குறித்து, "ஐம்பத்தோரக்கரங்கட்கும் அகரம் என்கிற அக்கரம் உயிராய் நின்றியக்குவதுபோலவே முழுமுதல்வனும் எல்லா ஆன்மாக்களிடத்திலும் அறிவுக்கறிவாய்ப் பொருந்தி நிற்கின்றான். சடம், சித்து எல்லாவற்றிலும் இங்ஙனம் கர்த்தா நிறைந்துநின்று அறிவித்தாலல்லது உயிர் அறியாது. இங்ஙனம் அறிவுக்கறிவாய், உயிர்க்குயிராய் முதல்வன் நிற்றல் அநாதியே உள்ள முறைமையாம்." (இருபா இருபஃது விரிவுக்கட்டுரை, ப.42) என்று ஸ்ரீநிவாஸாசாரியன், தே.ஆ அவர்கள் குறிப்பிடுகின்றார். இக்கருத்தின் வழியாக உயிருக்கு அறிவித்தலின் பொருட்டு ஒன்றாயும் உடனாயும் வேறாயும் நின்று அருள்புரிவதைக் காணமுடிகின்றது. இதனை சங்கார காரணனாகிய சிவபெருமான் உயிர்களுக்குப் பதி ஞானத்தால் அருளும் நிலை குறித்து,

"அவையே தானேயாய், இரு வினையின்

போக்கு வரவு புரிய, ஆணையின்

நீக்கம் இன்றி நிற்கும் அன்றே" (சிவஞான.சூத்.2)

என்று வரும் சூத்திரத்தின் மூலம் உயிர்கள் இருவினையினால் பெறும் பிறப்பு, இறப்பு பற்றியும் சிற்சத்தி என்னும் அறிவாற்றல் குறித்தும் அறிந்துகொள்ள முடிகின்றது.

## இறைவனது உபகாரங்கள்

மூன்று மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை என்பன அறிவில்லாத சடப்பொருள்களாக கருதப்படுகின்றது. அவை பக்குவம் பெறுவதற்கு தகுதியற்றவையாகும். அதனால் அவை அஞ்ஞானச் சடப்பொருள்களாகும். மேலும், அவை அறிவுடைய பொருளினைத் தாமாகச் சென்று சேர்வதில்லை என்பதை,

"மும்மலம் சடம்அணு மூப்பு இளமையின் நீ" (இருபா.பா.1:26)

என்று வரும் பாடல் வரியில் குறிப்பிடப்பட்டுள்ளது. உயிர் ஒரு பொருளை அறிகின்றது. அது அப்பொருளைப் பொருந்தி அறிகின்றது என்பது குறித்து, "கண்ணொளி வேறு. கண்ணொளி தானாகவே சென்று அப்பொருளைப் பற்றி அறியவல்லது அல்ல. காரணம் அது தானாகக் கண்டு அறியுமாயின் அப்பொருளை இருள் உள்ள வழியும் கண்டறிய வேண்டும். ஆயினும் அவ்வாறு நிகழ்வதில்லை. கண்ணொளி அப்பொருளைக் காணவேண்டுமாயின் அதற்கு ஒரு ஒளிப்பொருள் துணையாக வேண்டும்." (இருபா இருபஃது (பொருளுரையும் விரிவுரையும்), ப.20) என்று உரையாசிரியர் பொன்னையா அவர்கள்

குறிப்பிடுகின்றார். மேற்கூறப்பட்டுள்ள எடுத்துக்காட்டினைக் கொண்டு ஒளிப் பொருளாக விளங்கும் இறைவனது தன்மையினையும் அவன் மேற்கொள்ளும் காட்டும் உபகாரத்தையும் உணரமுடிகின்றது. இதனை,

"காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்பேல்" (சிவஞான.சூத்.11)

எனப்படும் சூத்திர தொடரில் இறைவன் உயிர்களின் அஞ்ஞானத்தை நீக்கி அறியும் தன்மையினை அடைய செய்கின்றான் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார். அறியச் செய்தலே காட்டும் உபகாரம் என்றும் தெளிவுற எடுத்துக்காட்டுகின்றது இத்தொடர்.

இறைவன் உயிருக்கு உயிராய் உடனாக நின்று அவ்வுயிர் அறியும் பொருட்டு காணும் உபகாரத்தினை புரிகின்றான். ஒளிப்பொருளோடு கூடிய கண்ணொளியுள், கண்ணொளி தானே சென்று அப்பொருளினைப் பற்றாது. இதன் காரணம், அவை சடநிலையில் இருப்பதாலும் அவற்றை இணைந்து பொருந்து வைக்க ஒளிப்பொருள் தேவை என்பதாலும் ஆகும். அதனால் தான் காட்டும் உபகாரம் செய்யும் இறைவனே உயிருடன் உடனாய் நின்று காணுதலையும் செய்கின்றான். இதன் மூலம் உயிரானது அறிவு பெறுகின்றது என்பதை சுட்டிக்காட்டுகின்றது இந்நூல். இறைவன் பேரறிவு படைத்தவன் என்பதாலும் அவனின் முற்றுணர்வு முதலாக எண்குணங்களைக் கொண்டவன் என்பதாலும் அவனே நித்தியப் பொருளாகவும் ஒளி பொருளாகவும் விளங்குகின்றான் என்பதையும் சித்தாந்த சாத்திரங்கள் குறிப்பிடுகின்றது.

## முடிவுரை

பதி, பசு, பாசம் மூன்றும் அநாதி பொருள்கள். பதியான இறைவன் எண்குணங்களை உடையவன். இயல்பிலே சிற்றறிவுடைய பொருளான உயிர் அநாதியாகவே தொடரும் ஆணவ மலப் பற்றினால் பதியினை அறியாமல் இருக்கின்றது. இம்மலப்பற்றினால் இறைவன் உயிர்களை விட்டு விலகி நிற்கவில்லை. உயிர் தன் இயலாமையின் காரணமாகவும் விருப்பத்தின் காரணமாகவும் இயல்பாகவே ஒன்றைச் சார்ந்த நிற்கும் தன்மையினாலும் ஆணவ மலத்தினைப் பற்றுகின்றது. எங்கும் வியாபித்து நிற்கும் தன்மையினாலும் பதிஞானத்தாலும் உயிர்களுக்கு இறைவன் அருள்புரிந்து மலப்பற்றினை நீக்குகின்றான் என்பதை இக்கட்டுரை வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது.

## References


ஞானசம்பந்தன், அ.ச. (1999) பெரிய புராணம் - ஒர்ஆய்வு, கங்கை புத்தக நிலையம், சென்னை.

அடிகளாசிரியர், (1998) திரு மூலரும் பேருரையும், திருவருள் நிலைய வெளியீட்டகம், விழுப்புரம்

கோமதி சூரிய மூர்த்தி (2003) காரைக்காலம்மையார், சாகித்திய அகாதெமி வெளியீடு, சென்னை

சுப்பிரமணியர், ச.வே. (2009) கண்ணப்ப நாயனார் மூலமும் உரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை

சுப்பிரமணிய முதலியார் (2011) பெரியபுராணம் (7 தொகுதிகள்), சேக்கிழார் நிலைய வெளியீடு, கோயம்புத்தூர்

திருச்சிற்றம்பலம். சிவ (2006) பெரிய புராணம் தெரிவுரை, கங்கை புத்தக நிலையம், சென்னை

இராசமாணிக்கனார், ம. (2011) பெரிய புராண ஆராய்ச்சி, செண்பகா பதிப்பகம், பாண்டிபதார், சென்னை


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License